Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் புதன்கிழமை, ஆகஸ்ட் 25, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 42

மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன் தலைமையில்

காட்டாங்குளத்தூர் கிழக்கு ஒன்றியம் சார்பாக வல்லம் பகுதியில் உள்ளாட்சி தேர்தல் ஆலோசனை கூட்டம்

அதிமுக மகளிர் அணிச் செயலாளர் பா.வளர்மதி ஆலோசனை வழங்கினார்

செங்கல்பட்டு, ஆக.25 2021: செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் காட்டாங்குளத்தூர் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட வல்லம் பகுதியில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் உள்ளாட்சி தேர்தல் குறித்து கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் மேலமையூர் இ. சம்பத்குமார் ஏற்பாட்டில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது கழக மகளிர் அணி செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பா.வளர்மதி மற்றும் மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் கழக மகளிரணி செயலாளரும் முன்னாள் அமைச்சரும் வளர்மதி பேசியதாவது:

மக்கள் பதிலடி கொடுக்க காத்திருப்பதால் வரும் உள்ளாட்சி தேர்தலில் திமுக படுதோல்வி அடையும், கூட்டுறவு சங்கங்களில் நகை கடன் தள்ளுபடி பற்றிய தெளிவான விவரங்கள் இதுவரை எதுவும் இல்லாத காரணத்தினால் விவசாயிகள் தொடர்ந்து கடன் பெற்று விவசாயம் செய்ய முடியாமல் தவித்து வருகின்றனர் திமுகவின் வாக்குறுதிகளை நம்பி வாக்களித்தவர்கள் கழக அரசின் சாதனைகளையும் திட்டங்களையும் கையாலாகாத திமுக அரசின் செயல்பாடுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஏன் திமுகவுக்கு வாக்களித்தோம் என வேதனைப்பட ஆரம்பித்துள்ளனர். சதித் திட்டங்கள் மூலம் உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெறலாம் என நினைக்கும் தி.மு.க.வினருக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டுமென்றால் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டாலே போதும் கழக வேட்பாளர் வெற்றி உறுதியாகிவிடும். காட்டாங்குளத்தூர் கிழக்கு ஒன்றியத்திலுள்ள அனைத்து இடங்களிலும் மாபெரும் வெற்றி பெற்று திமுகவிற்கு படுதோல்வியை பரிசாக அளிப்போம் இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.கணிதாசம்பத், ப.தன்சிங், மாவட்ட கழக துணைச் செயலாளர் டி.சீனிவாசன், செங்கல்பட்டு நகர செயலாளர் வி.ஆர் செந்தில்குமார் , எ.எம். பொன்னுசாமி, மாவட்ட பிரதிநிதி செட்டிபுண்ணியம் சி.ஆர். குணசேகரன், கூடுவாஞ்சேரி பேரூர் கழக செயலாளர் எஸ்.டி.பிரசாத், வேங்கடமங்கலம் ரவி, அஞ்சூர் தேவராஜ், வீராபுரம் சி.சரவணன்,

ஆலப்பாக்கம் கே.சல்குரு, சிங்கப்பெருமாள் கோயில் ஷாக்கிர்பாஷா, புரட்சித்தலைவி அம்மா பேரவை மாவட்ட இணைச் செயலாளர் வழக்கறிஞர் ஜே.ஜெகதீசன், வழக்கறிஞர் சி.கே.பெருமாள் மற்றும் கட்சி நிர்வாகிகள் திரளானோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் காட்டாங்குளத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் மேலமையூர் இ.சம்பத்குமார் செய்திருந்தார்.

கருணாநிதியின் வாழ்க்கை, சிந்தனை குறித்து நவீன ஒளி படங்களுடன்

கலைஞர் கருணாநிதிக்கு 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.39 கோடி மதிப்பில் நினைவிடம்

முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆகஸ்ட் 25 2021: மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிடம் அருகே கலைஞர் கருணாநிதிக்கு 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.39 கோடி மதிப்பில் நினைவிடம் அமைக்கப்படும் என்று சட்டசபையில் 110 விதியின் கீழ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். தொடர்ந்து முதலமைச்சர் பேசியதாவது: கருணாநிதியின் வாழ்க்கை, சிந்தனை குறித்து நவீன ஒளி படங்களுடன் நினைவிடம் அமைக்கப்படும்.

இன்று நாம் பார்க்கும் தமிழ்நாடு கலைஞர் உருவாக்கியது. 5 முறை முதலமைச்சராக இருந்து தமிழ் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் திட்டத்தை வகுத்தவர் கருணாநிதி.

13 முறை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் கலைஞர். தோல்வி அவரை தொட்டதே இல்லை, வெற்றி அவரை விட்டதே இல்லை.

கடந்த அரைநூற்றாண்டு காலத்தில் நிரந்தர தலைப்புச்செய்தியாக இருந்தவர் கருணாநிதி. 80 ஆண்டுகால பொது வாழ்க்கையில் 60 ஆண்டுகள் சட்டசபை உறுப்பினராக இருந்தவர் மு.கருணாநிதி. இந்திய அரசியலை வழிநடத்திய அரசியல் ஞானி முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டினார்.

சென்னையில் பல்வேறு இடங்களில் லேசான நில அதிர்வு

யாரும் பயப்பட வேண்டாம் சமூக வலைதள வதந்திகளை நம்ப வேண்டாம்

சென்னை, ஆக. 25 2021: சென்னையில் பல்வேறு இடங்களில் நில அதிர்வு உணரப்பட்டதால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

சென்னையில் இருந்து வடகிழக்கில் 320 கி.மீ தொலையில் வங்கக்கடலில் 5.1 ரிக்டர் அளவில் 10 கி.மீ ஆழத்தில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க நில அதிவு கண்காணிப்பு மையம் உறுதி செய்தது. சென்னை, ஆந்திரா அருகே வங்கக்கடலில் 5.1 ரிக்டர் அளவில் பகல் 12.35 மணியளவில் நில நடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில நடுக்க ஆய்வு மையம் கூறியுள்ளது.

யாரும் பயப்பட வேண்டாம் சமூக வலைதள வதந்திகளை நம்ப வேண்டாம் இதன் தாக்கத்தால் சென்னையின் பல இடங்களில் நில அதிர்வு உணரப்பட்டது.

சென்னை நுங்கம்பாக்கம், கே.கே. நகர், அம்பத்தூர், அடையாறு, பெசன்ட் நகர், ஆழ்வார்பேட்டை, அண்ணா நகர் உள்ளிட்ட பகுதிகளில் லேசான நில அதிர்வு உணரப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது . இதனால் மக்கள் அச்சத்தால் வீடுகளை விட்டு வெளியேறி சாலையில் கூடினர். இதனால் சென்னையில் பரபரப்பான சூழல் காணப்பட்டது.

வருஷநாடு ஆரம்ப சுகாதார நிலையத்தில்

மருத்துவரை மாற்ற கோரி பொதுமக்கள் கோரிக்கை

தேனி, ஆகஸ்ட் 25 2021: ஆண்டிபட்டி தேனி மாவட்டம் கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களால் 2006 ஆம் ஆண்டு மக்கள் பயன்பாட்டிற்கு துவங்கப்பட்டது இந்த மருத்துவமனையை நம்பி வருஷநாடு சிங்கராஜபுரம் தங்கம்மாள்புரம் முறுக்கோடை தும்மக்குண்டு ஆகிய ஊராட்சிக்குட்பட்ட சுமார் 60 கிராம மக்கள் மற்றும் மலைகிராம மக்கள் இந்த மருத்துவமனையை பயன்படுத்தி வருகின்றனர். மருத்துவமனை தொடங்கப்பட்ட நாள் முதல் 16 வருடங்களாக ஒரே மருத்துவர் மாற்றப்படாமல் பணிபுரிந்து வருகிறார் செவிலியர்கள் பற்றாக்குறையும் உள்ளது. பணிக்கு சரியான நேரத்திற்கு வருவதில்லை எனவும் மருத்துவர் தனியாக கிளினிக் நடத்தி வருவதாகவும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் நோயாளிகளை அவரது தனியார் மருத்துவமனைக்கு செல்லும்படியும் பணவசதியின்றி அரசு மருத்துவமனையை நாடும் மக்கள் குறை கூறுகின்றனர். இந்த மருத்துவமனைக்கு பெண்கள் முதியவர்கள் குழந்தைகள் என அனைவரும் வந்து மருத்துவர் இல்லாததால் தனியார் மருத்துவமனையை நாட வேண்டிய சூழல் உள்ளதாகவும் கர்ப்பிணி பெண்களுக்கு ஸ்கேன் செய்ய அவர் கூறும் ஸ்கேன் சென்டர் அங்கே செல்ல வேண்டுமெனவும் மாற்று ஸ்கேன் சென்டரில் எடுத்து வந்தால் அதை ஏற்கப்பட மாட்டாது எனவும் இதனால் அவருக்கு வரும் கமிஷன் கிடைப்பதில்லை என்றும் கர்ப்பிணிப் பெண்களை அலைக்கழிப்பு செய்து வருகின்றார். நாய் கடித்து மற்றும் இரும்புத் துகள்கள் ஏதாவது ஏற்றப்பட்டு டிடி இன்ஜெக்சன் மருத்துவமனையில் இல்லையெனவும் வேறு மருத்துவமனைக்கு செல்ல பரிந்துரைப்பதாக இதனால் போதிய மருத்துவர்கள் இல்லாததால் குழந்தைகள் பலியான சம்பவம் அரங்கேறியுள்ளது மேலும் பெண் மருத்துவரை நியமிக்க வேண்டும். எனவும் ஷிப்ட் முறையில் செவிலியர் களையும் பணி அமர்த்த வேண்டும். எனவும் 16 ஆண்டுகளாக ஒரே இடத்தில் பணியாற்றி வரும் மருத்துவர் வைக்கும் சட்டமே மருத்துவமாக இருக்கிறது. என இப்பகுதி மக்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். ஆம்புலன்ஸ் நிறுத்த வேண்டிய இடத்தில் இவரது இரு வாகனங்களை நிறுத்தி ஆம்புலன்ஸ் நிறுத்த இடமில்லை என எழுதிக் கொடுத்து இதனால் இப்பகுதி மக்களுக்கு ஆம்புலன்ஸ் சேவையும் இவரால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நோய்வாய்ப்பட்டவர்கள் வெளியிலிருந்து வரும் ஆம்புலன்ஸ் எதிர்பார்த்து தாமதமானதால் உயிர் பலியும் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த மருத்துவரை மாற்றி இனிமேலும் உயிர்பலி தடுக்கப்படுமா உரிய மருத்துவம் கிடைக்குமா என்ற அச்சத்தில் பொதுமக்கள் வேதனையுடன் கூறுகின்றனர். எனவே மாவட்ட நிர்வாகம் இந்த வருஷ நாடு ஆரம்ப சுகாதார நிலையத்தை கண்காணித்து ஆண் மருத்துவரை மாற்றி பெண் மருத்துவரை நியமிக்க வேண்டுமெனவும் உரிய செவிலியர்கள் காவலர்கள் தூய்மைப் பணியாளர்கள் ஓட்டுநர்கள் இருக்கின்றார்களா என ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் பாதிக்கப்பட்ட நோயாளிகளும் கூறுகின்றனர்.

தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒற்றை இலக்கத்தில் கொரோனா பாதிப்பு 28 நாட்களாக இறப்பு இல்லாமல் சாதனை டீன் பாலாஜி நாதன் தகவல்

தேனி, ஆகஸ்ட் 25 2021: தேனி, மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த ஒரு மாதகாலமாக ஒற்றை இலக்கத்தில் கொரோனா பாதிப்பு குறைந்துள்ளதாகவும், மேலும் கடந்த 28 நாட்களாக இறப்பு இல்லாமல் உள்ளதாகவும் மருத்துவமனை டீன் பாலாஜி நாதன் பத்திரிக்கையாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் ,சுகாதாரத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் உத்தரவின்பேரில் ,தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 24 மணி நேர தடுப்பூசி மையம் துவக்க விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர்முரளிதரன் கலந்து கொண்டு புதிய மையத்தினை திறந்துவைத்தார். இதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களிடம் பேசிய டீன் பாலாஜி நாதன் கூறியதாவது ,கொரோனா பாதிப்பின் மூன்றாவது அலை வரக்கூடாது என்பதில் மாற்று கருத்து இல்லை. அதே சமயம் ஒருவேளை அதனுடைய தாக்கம் ஏற்பட்டால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 24 மணி நேரமும் செயல்படும் வகையில் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய மருத்துவ மையம் திறக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ மையத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வயதினருக்கும். கோவாக்சின் ,கோவிஷீல்டு உள்ளிட்ட இரண்டு வகையான தடுப்பூசிகளையும், 24 மணி நேரத்தில் அவரவர் வசதிப்படி ஆதார் கார்டை கொண்டு வந்து தடுப்பூசி போட்டு பயன்படுத்தி கொள்ளலாம். மேலும் இங்கு சுழற்சி அடிப்படையில் மருத்துவர்களும் , செவிலியர்களும், மருத்துவ பணியாளர்களும் 24 மணி நேரமும் பணியில் இருப்பர். ஊசி செலுத்தி கொள்வதில் சந்தேகங்கள் ஏற்பட்டால் இரண்டு தொலைபேசி எண்களை பிரத்தியேகமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ,அதன்படி 94 86 32 16 70 மற்றும் 944 344 73 69 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெறலாம் என்றும் மருத்துவமனை டீன் தெரிவித்தார். இந்தியாவிலேயே குறிப்பாக தமிழ்நாட்டில் 100 சதவிகிதம் தடுப்பூசி செலுத்திய மாவட்டமாகவும்,கொரோனா பாதிப்பே இல்லாத மாவட்டமாக தேனி மாவட்டத்தை உருவாக்க, பொதுமக்கள் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த பேட்டியின் போது மருத்துவமனை கண்காணிப்பாளர் இளங்கோவன் ஆர். எம். ஓ. ஈஸ்வரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

கோவை மாவட்டத்தில் கூடுதல் தளர்வுகளுடன் ஊரடங்கு அமல்

மாவட்ட ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் அறிக்கை:

கோவை, ஆகஸ்ட் 25 2021: தமிழக அரசு அறிவித்த கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, மாநகராட்சி ஆணையர், மாவட்ட வருவாய் அலுவலர், காவல்துறை அதிகாரிகள் மற்றும் துறை அலுவலர்களுடன் ஆட்சியர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

மேலும் மண்டல மற்றும் கோட்ட அளவிலும் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தப்பட்டது. தமிழக அரசால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகளுடன், பின்வரும் செயல்பாடுகள் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அனைத்து கல்லூரிகளிலும் சுழற்சி முறையில் வகுப்புகள் நடத்த அனுமதிக்கப்படுகின்றன. மாவட்டத்தில் அனைத்து மழலையர் காப்பகங்கள் செயல்பட அனுமதிக்கப்படுகின்றன. பள்ளி, கல்லூரிகள் கல்லூரிகள், பள்ளிகள், காப்பகங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள், காப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டதை கல்வி, பள்ளி நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும்.

நீச்சல் குளங்கள், விளையாட்டு பயிற்சிகளுக்காக மட்டும் 50 சதவீத பயிற்சியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. பயிற்சியாளர்கள் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட பயிற்சி பெறுபவர்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டிருக்க வேண்டும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் நடத்தப்படும் வேலைவாய்ப்பு பயிற்சி வகுப்புகள் நிலையான வழிகாட்டு நடைமுறைகளை பின்பற்றி செயல்பட அனுமதிக்கப்படுகிறது.

தங்கும் விடுதிகள், கேளிக்கை விடுதிகளில் உள்ள மதுக்கூடங்கள் செயல்பட அனுமதிக்கப்படுகின்றன. உயிரியல் பூங்காக்கள், படகு இல்லங்கள் ஆகியவை நிலையான வழிகாட்டு நடைமுறைகளை பின்பற்றி செயல்பட அனுமதிக்கப்படுகின்றன. தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்கள் 100 சதவீத பணியாளர்களுடன் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. பணியாளர்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டதை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும். அனைத்து கடைகள் மற்றும் செயல்பாடுகளும் ஆகஸ்ட் 23-ம் தேதி திங்கள்கிழமையில் இருந்து இரவு 10 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள அனைத்து திரையரங்குகளும் 50 சதவீத பார்வையாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. அனைவரும் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டதை திரையரங்கு உரிமையாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும். கூடுதல் கட்டுப்பாடுகள் கோவை மாவட்டம் கேரள மாநில எல்லைப் பகுதியை ஒட்டியுள்ள மாவட்டம் என்பதால், தற்போது மாவட்டத்தில் இருக்கும் கொரோனா தொற்றை மேலும் குறைக்க கீழ்காணும் கூடுதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

கேரள-தமிழக மாநில எல்லைகள் அனைத்தும் சோதனைச் சாவடி அமைத்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டத்திற்குள் விமானம், தொடர்வண்டி, மேற்படி சோதனைச் சாவடி வழியாக வரும் பயணிகள் அனைவரும் 72 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட ஆர்டிபிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட கோவிட்யின்மை சான்று அல்லது கொரோனா தடுப்பூசி (2 தவணைகள்) செலுத்திக் கொண்டதற்கான சான்று கண்டிப்பாக உடன் வைத்திருக்க வேண்டும். அனைவரும் அரசு அறிவித்துள்ள அனைத்து கொரோனா தடுப்பு நிலையான இயக்க நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். கண்காணிக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொரோனா தடுப்பு பணிக்காக மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும். என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

மதுபான கடையை இடமாற்றம் செய்ய பொதுமக்கள் கோரிக்கை

ஆண்டிபட்டி ஆக 25 2021: வருசநாடு பகுதியில கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு ஊராட்சியில் இயங்கி வரும் டாஸ்மாக் கடையை இடமாற்றம் செய்ய பொதுமக்களும் பக்தர்களும் சமூக ஆர்வலர்களும் பள்ளி குழந்தைகளின் பெற்றோர்களும் நீண்ட நாள் கோரிக்கையை வைத்துள்ளனர். இந்த டாஸ்மாக் கடை அருகே வைகை ஆறு உள்ளது. இந்த வைகை ஆற்றில் குடிமகன்கள் நிலை தடுமாறி விழுந்து உயிர் பலியும் ஏற்பட்டுள்ளது. மேலும் குடிமகன்கள் பாட்டில்களை உடைப்பதால் பிளாஸ்டிக் பை மற்றும் டம்ளர் ஆகியவற்றை ஆற்றுப்பகுதியில் விடுவதால் சுகாதாரக்கேடு ஏற்படுகிறது நீர்நிலை மாசுபடுகிறது வைகை ஆற்றை கடந்து விவசாய நிலங்களுக்கு செல்லும் பெண்கள் அவதிக்கு உள்ளாகின்றனர். வருஷ நாட்டிலேயே மிகவும் குறுகிய சாலையில் அமைந்துள்ள இடத்தில் இருப்பதால் அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகிறது 100 மீட்டர் சுற்றளவில் காளியம்மன் கோவில் விநாயகர் கோவில் ஐயப்பன் மணிமண்டபம் வருஷநாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆகியவை இருப்பதால் கடையை மாற்ற கோரி பெண்கள் கடந்த ஆண்டு பஸ் மறியலும் செய்தனர். இக்கோரிக்கையை ஏற்று 2019ஆம் ஆண்டு அன்றைய மாவட்ட கலெக்டர் பல்லவி பல்தேவ் கடையை இடமாற்றம் செய்ய உத்தரவிட்டார். ஆனால் மீண்டும் அதே இடத்தில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவை மீறி டாஸ்மாக் அங்கேயே இயங்கி வருகிறது. எனவே பக்தர்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் விவசாயிகள் வைகை ஆற்று நீரை குடிநீராக பயன்படுத்தும் பொதுமக்கள் என அனைவரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இது சம்பந்தமாக டாஸ்மாக் பார் மற்றும் கடை வைகை நகர் செல்லும் சாலையில் வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்ட நிலையில் அனைத்து ஆய்வு செய்த பின்னரும் ஒருசிலரின் முயற்சியால் டாஸ்மார்க் கடை அங்கேயே செயல்பட்டு வருகிறது. என்பது வேதனைக்குரிய செய்தி எனவே மாவட்ட நிர்வாகம் தற்போது இயங்கி வரும் இடத்தில் இருந்து மாற்று இடத்திற்கு டாஸ்மாக்கை மாற்ற தேனி மாவட்ட ஆட்சியர் முரளிதரன் நடவடிக்கை எடுப்பார். என்ற எதிர்பார்ப்புடன் சமூக ஆர்வலர்களும் பெண்களும் பொதுமக்களும் கோரிக்கை வைக்கின்றனர். மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையில் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
ஆகஸ்ட் 25, 2021

மதுரை சிந்தாமணியில் அப்பள தொழிலாளர்கள் பொதுமக்களுக்கு கொரானா தடுப்பூசி முகாம்

மதுரை, ஆகஸ்ட் 25 2021: மதுரை, கொரானா பெருந்தொற்றை ஒழிக்கும் விதமாக நாடு முழுவதும் அனைவர்க்கும் அரசு, தனியார் அமைப்புகள் மூலம் கொரானா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் கொரானா தடுப்பூசி பற்றி மத்திய மாநில அரசு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

அந்தவகையில் மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஒன்றியத்துக்குட்பட்ட சிந்தாமணியில் கடம்பவனம் அப்பளவியாபாரிகள் சங்கம் சார்பாக அப்பளவியாபாரிகள், அப்பள தொழிலாளர்கள். பொதுமக்கள் என்று 18 வயதிற்கு மேற்பட்ட அனைவர்க்கும் சங்க தலைவர் இளங்கோ தலைமையில் கொரானா தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

சிந்தாமணி, வேப்பமரம், பர்மா காலனி கண்ணன் காலனி உள்ளிட்ட சுற்றுப்புற பகுதிகளிலிருந்து ஏராளமானோர் ஆர்வமுடன் கலந்துகொண்டு தடுப்பூசி செலுத்திக்கொண்டனர்.

இதில் செயல் தலைவர் சீனிவாசன், பொருளாளர் நாகராஜன், செயற்குழு உறுப்பினாகள், திமுக வட்ட செயலாளர் கணேசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

திண்டிவனம்: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மேம்பாலம் அருகே விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவனின் 59வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட பொருளாளர் வழக்கறிஞர் திலீபன் தலைமையில் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார் சிறப்புரை ஆற்றினார்.

மதுரை: மதுரையில் பாண்டியன் அப்பளம் புதிய யூனிட் திறப்பு விழா நடைபெற்றது. வ உ சி பேரன் வ.உ.சி.வா சிதம்பரம் பிள்ளை மற்றும் சக்ரா விஷன் இந்தியா ஃபவுண்டேஷன் பவுண்டர் மற்றும் திரைப்பட இயக்குநர் ராஜசேகரன் திறந்து வைத்தனர்.

முன்னதாக சமீபத்தில் மறைந்த பாண்டியன் அப்பளம் நிறுவனத்தின் சேர்மன் திருமுருகன் அவர்களின் மனைவி திருமதி ராதா ஜெயலட்சுமி அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுஅருகில் மதுரை பாண்டியன் அப்பளம் சேர்மன் திருமுருகன் மற்றும் கிருத்திக்குமார் உள்ளனர்.

வரம்பனூர் ஊராட்சியில் ஈரநிலம் அறக்கட்டளை சார்பில் கொரோனா விழிப்புணர்வு

வேப்பூர், ஆகஸ்ட் 25 2021: கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள வரம்பனூர் ஊராட்சியில் ஈரநிலம் அறக்கட்டளை சார்பில் கொரோனா விழிப்புணர்வு துண்டு பிரச்சாரம் செய்தனர்.

ஓவியர் தமிழரசன் ஏற்பாட்டில் நடைபெற்றது கிராம நிர்வாக அலுவலர் அருள்பிரகாஷ் கிராம உதவியாளர் மணி பொதுமக்களுக்கு வழங்கினர் அப்போது அறக்கட்டளை செயலாளர் முருகன் உடன் இருந்தார்.

மதுரையில் உழவர் உற்பத்தியாளர் நிறுவன மேலாண்மை பயிற்சி

மதுரை, ஆகஸ்ட் 25 2021: மதுரை, விவசாயிகளுக்கு உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைப்பதன் மூலம் பெறக்கூடிய நன்மைகள் குறித்த பயிற்சியானது மதுரை அண்ணா நகர் உழவர் சந்தை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக அலுவலக கூட்ட அரங்கில் அட்மா திட்டம் மூலமாக வேளாண்மைத்துறையின் மேற்கு வட்டாரம் மூலம் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் மதுரை கிழக்கு மற்றும் மதுரையின் மேற்கு வட்டாரத்தைச் சேர்ந்த 10 உழவர் உற்பத்தியாளர் குழுக்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மதுரை மேற்கு வட்டார ஒருங்கிணைப்பாளர் கமலாலட்சுமி வரவேற்புரை ஆற்றினார். உழவர் ஆர்வலர் குழுக்கள் இணைந்து உழவர் உற்பத்தி குழுக்களாகவும், உழவர் உற்பத்தியாளர் குழுக்களை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைக்கும் முறையினை விவரித்தார். மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் விவேகானந்தன் விவசாயிகளை வியாபாரிகளாக உயர்த்தி, அவர்களின் உற்பத்தி பொருட்களை அவர்களே விலை நிர்ணயம் செய்யும் உத்திகளை பற்றி விவரித்தார். வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலதிட்டம்) சுப்புராஜ் உழவர் உற்பத்தி நிறுவனங்களின் முக்கியத்துவத்தை விவரித்தார். வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வேளாண்மை துணை இயக்குநர் விஜயலட்சுமி அவர்கள் பல்வேறு விவசாய பொருட்களின் விற்பனை வாய்ப்புகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விவரித்தார். 'யூனிக்' கல்வி நிறுவனத்தின் நிர்வாகி பன்னீர்செல்வம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் அமைப்பு செயல்படும் விதம், அங்கீகாரம் பெறும் விதம், பல்வேறு வகையான தொழில் வாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதி விவரங்கள் குறித்து தெளிவாக விவரித்தார். விவசாயிகளுக்கு பராம்பரிய நெல் இரகங்கள் மற்றும் அரிசி வகைகள் மற்றும் பல்வேறு மதிப்புக் கூட்டப்பட்ட எண்ணெய் வகைகள் மற்றும் எதிர்ப்புச் சக்தி உணவுகள் குறித்த கருத்துக்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது. வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் ஆதார நிதி ரூ.10,000 / - உணவு பாதுகாப்பு குழுக்கான ஆதார நிதி ரூ.10000 / - ஆகியவற்றை வழங்கினார். அட்மா திட்டத்தின் வட்டார தொழில்நுட்ப மேலாளர் இராஜசேகர் அவர்கள் விழாவிற்கு வந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை மதுரை கிழக்கு மற்றும் மேற்கு வட்டார உதவி தொழில் நுட்ப மேலாளர் மூவேந்திரன், பாலமுருகன், யுவராஜ் ஆகியோர் மேற்கொண்டனர்.

மதுரை பரவையில் பேரூராட்சி பணியாளர்களுக்கு மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பயிற்சி

மதுரை, ஆக. 25 2021: புதிதாக கட்டப்படும் வீடு, அலுவலகம் உட்பட அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்ப வசதி ஏற்படுத்த கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம் பரவை பேரூராட்சியில் மதுரை மாவட்ட பேரூராட்சி நிர்வாகத்தின் சார்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடத்தப்படும் மழைநீர் சேகரிப்பு தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி நிர்வாக பொறியாளர் முகமது இஸ்மாயில், துணை நீர்நிலை வல்லுநர் விஜயபாஸ்கர், பேரூராட்சிகளின் உதவி நிர்வாக பொறியாளர் இளங்கோவன் ஆகியோர் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பான பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சியில் பரவை பேரூராட்சி செயல் அலுவலர் சுந்தரி, எழுமலை செயல் அலுவலர் ஜெயமாலு, பாலமேடு செயல் அலுவலர் தேவி, கல்லுப்பட்டி&பேரையூர் செயல் அலுவலர் வைரக்கண்ணு வாடிப்பட்டி செயல் அலுவலர் சரஸ்வதி உட்பட பேரூராட்சி செயல் அலுவலர்கள், பரவை பேரூராட்சி உதவியாளர் சுந்தர் உட்பட பேரூராட்சி பணியாளர்கள் கலந்துகொண்டனர்

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 24 மணி நேர தடுப்பூசி மையம் துவக்கம்

விக்கிரவாண்டி, ஆக. 25 2021: விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 24 மணி நேர கொரோனா தடுப்பூசி மையம் துவக்க நிகழ்ச்சி நடந்தது.

தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆணையின் பேரில் சுகாதார துறை அமைச்சர் சுப்பிரமணியன் மருத்துவ கல்லூரிகளில் 24 மணி நேரமும் கொரோனா தடுப்பூசி மையம் துவக்க உத்திரவிட்டார்.

இதையடுத்து நேற்று விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனை வளாகத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி டீன் குந்தவி தேவி தலைமை தாங்கி 24 மணி நேர தடுப்பூசி மையத்தை துவக்கி வைத்து அவர் பேசியதாவது.

தமிழகத்தில் தற்பொழுது கொரோனா நோய் தொற்று பரவலை தடுக்க அரசு பல்வேறு துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சிலர் கொரோனா தடுப்பூசி முதல்தவணை போட்டுக் கொண்டு இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்தி கொள்ள அலட்சியம் காட்டி வருகின்றனர். இரண்டு தவணை தடுப்பூசி தவறாமல் அனைவரும் செலுத்தி கொண்டால் தற்பொழுது வருகின்ற மூன்றாவது அலையில் பொதுமக்கள் தங்கள் உயிர்களை முழுமையாக பாதுகாத்து கொள்ள முடியும். ஒவ்வொருவரும் தடுப்பூசி குறித்த விழிப்புணர்வுகளை அருகில் உள்ள நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எடுத்து சொல்லி அவர்கள் தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டும்.

அரசு உத்திரவு படி விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 24 மணி நேரமும், மருத்துவ குழுவினர் பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்த தயாராக உள்ளனர். தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள், அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் எந்நேரமும் மருத்துவ மனைக்கு நேரில் வந்து தடுப்பூசி செலுத்தி கொள்ளலாம். இவ்வாறு டீன் குந்தவி தேவி பேசினார்.

நிகழ்ச்சியில் மருத்துவ கண்காணிப்பாளர் புகழேந்தி, ஆர்.எம்.ஓ., சாந்தி, ஏ.ஆர்.எம்.ஓ., வெங்கடேசன் ,செவிலியர்கள். பணியாளர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 24மணி நேர கொரோனா தடுப்பூசி மையத்தை டீன் குந்தவிதேவி துவக்கி வைத்தார்.

வீடூரில் தடுப்பூசி முகாமிற்கு அதிக அளவில் குழு உறுப்பினர்கள் அழைத்து வந்த வட்டார இயக்க மேலாளருக்கு ஆட்சியர் பாராட்டு

திண்டிவனம், ஆக. 25 2021: வீடூரில் நடைபெற்ற தடுப்பூசி முகாமிற்கு அதிக அளவில் மகளிர் குழுவை சேர்ந்த பெண்களை தடுப்பு ஊசி செலுத்தி கொள்ள அழைத்து வந்த வட்டார இயக்க மேலாளருக்கு மாவட்ட ஆட்சியர் வாழ்த்து தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் வீடூரில் நடந்த கொரோனா தடுப்பூசி முகாமை துவக்கி வைத்து பேசிய மாவட்ட ஆட்சியர் மோகன், விழுப்புரத்தில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் விழுப்புரம் மகளிர் திட்ட வட்டார இயக்க மேலாளர் கண்ணகி மகளிர் குழுவை சேர்ந்த சுமார் 150 நபர்களை வீடூரில் நடைபெறும் முகாமிற்கு அழைத்து வந்து தடுப்பூசி போட வைப்பதாக உறுதியளித்தார். அதேபோல் இன்று சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை அழைத்து வந்துள்ளார். அதனால் அவரை தான் பாராட்டுவதாகவும் கூறி அங்கிருந்தவர்களை கைகளை தட்டி அவருக்கு வாழ்த்து தெரிவிக்குமாறு கூறினார்.

மணிப்பூர் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள பாஜகவின் மூத்த தலைவர் இல.கணேசன் காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் ஆசி பெற்றார்

காஞ்சிபுரம், ஆக. 25 2021: மணிப்பூர் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள பாஜகவின் மூத்த தலைவர் இல.கணேசன் காஞ்சிபுரம் வருகை தந்து காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் ஆசி பெற்றார்.

பாஜக மூத்த நிர்வாகியாக பணி புரிந்து வந்த இல.கணேசன் கடந்த சில நாட்களுக்கு முன் மணிப்பூர் மாநில ஆளுநராக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தால் நியமிக்கப்பட்டார். விரைவில் மணிப்பூர் சென்று பதவியேற்கவுள்ள நிலையில், காஞ்சிபுரம் ஓரிக்கை பகுதியில் அமைந்துள்ள மகாபெரியவர் சுவாமிகள் மணி மண்டபத்தில் சாதுர்மாஸ்ய விரதம் மேற்கொண்டு வரும் ஸ்ரீ காஞ்சி சங்கராச்சாரியார் விஜயேந்திரரை சந்தித்து அருள் ஆசி பெற்றார்.

அவருக்கு சங்கர மடம் சார்பில் பொன்னாடை போர்த்தப்பட்டு, மாலை மரியாதைகள் செய்யப்பட்டது. தமிழகத்திலிருந்து மணியானவர் மணிப்பூர் மாநில ஆளுநராக இல.கணேசன் சிறப்பாக பணியாற்ற வாழ்த்துவதாக விஜயேந்திரர் ஸ்வாமிகள் தெரிவித்தார்.

பிறகு அவர் நிருபர்களிடம், வருகிற 27-ஆம் தேதி மணிப்பூரில் ஆளுநராக பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகவும் 26ஆம் தேதி சென்னையிலிருந்து புறப்படுவதாக தெரிவித்தார்.

52 ஆண்டுகளாக சாதாரண தொண்டனாகவும் ஆர்எஸ்எஸ் அமைப்பில் பணிபுரிந்து அரசாங்க பணியில் ராஜினாமா செய்து முழு நேர வாழ்க்கையில் பணிபுரிந்தவறுக்கு ஒரு அங்கீகாரம் தரும் வகையில் இந்த பொறுப்பு கிடைத்து இருக்கிறதாக நான் கருதுகின்றேன். என் நாடு என் மக்கள் என்ற எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு. உணர்வுபூர்வமாக ஒட்டுமொத்த பாரத தேசத்தையும் நான் அப்படித்தான் கருதுகிறேன்.

மணிப்பூர் பகுதி எப்படிப்பட்ட பகுதி என தெரிந்து கொள்ள அரசு தந்துள்ளது. அதனை மகிழ்ச்சியோடு ஏற்று செல்கின்றேன். அரசியலோ, ஆன்மீகமோ, இலக்கியமோ அதன் பின்னால் இருக்கும் தேசியத்தில் தான் எனக்கு ஈடுபாடு அதிகம் அதில் தான் என் முத்திரை பதிந்துள்ளது. தமிழ் இருந்தாலும் சரி, இலக்கியமாக இருந்தாலும் சரி அந்த பணி தொடரும்.அதற்கு எந்த தடையும் இல்லை என்றார்.

கொல்லியங்குணம் சிவன் கோவிலில் திருக்கல்யாண உற்சவம்

திண்டிவனம், ஆக. 25 2021: திண்டிவனம் அடுத்த கொல்லியங்குணம் பகுதியில் அமைந்துள்ள மிகப் பழமையான சிவன் கோவிலில் ஆவணி மாத பவுர்ணமியை முன்னிட்டு சுவாமி திருக்கல்யாண நிகழ்ச்சி நடந்தது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த கொல்லியங்குணம் பகுதியில் மிகவும் பழமையான சிவன் கோவில் உள்ளது. இக்கோவிலில் ஆவணி மாத பவுர்ணமியையொட்டி நீலமலர் கண்ணம்மை உடனமர் நீலகண்டீஸ்வரர் சுவாமிக்கு திருக்கல்யாண நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியை முன்னிட்டு சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க யாகசாலை பூஜை மற்றும் திருமண வைபவ நிகழ்ச்சிகள் நடந்தது. சுவாமிக்கு சிவனடியார்கள் மேள வாத்தியங்கள் முழங்க சுவாமிக்கு மங்கலநாண் அணிவிக்கப்பட்டது. இந்த உற்சவத்தில் திண்டிவனம், மயிலம், கூட்டேரிப்பட்டு, செண்டூர் உள்ளிட்ட பல்வேறு பகுதியிலிருந்து பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி திருக்கல்யாண நிகழ்ச்சியை கண்டுகளித்தனர். நிகழ்ச்சி முடிவில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

வீடூர் அரசு பள்ளி சமையலைறை கட்டிடம் சேதம் மாற்று கட்டிடத்தில் செயல்பட மாவட்ட ஆட்சியர் உத்தரவு

திண்டிவனம், ஆக. 25 2021: திண்டிவனம் அடுத்த வீடூர் பகுதியில் தமிழக அரசின் கொரோனா தடுப்பூசி முகாமை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த வீடூர் பகுதியில் கடந்த காலங்களில் கொரோனா தொற்றின் முதல் மற்றும் இரண்டாவது அலையால் அதிக அளவு பாதிப்பு ஏற்பட்டது. தற்பொழுது மூன்றாவது அலை வரும் சூழலில் அதனை கட்டுப்படுத்தும் விதமாக அப்பகுதி பொதுமக்களுக்கு 100 சதவீத தடுப்பூசி செலுத்தி கொள்ளும் நோக்கில் இந்த முகாம் நடைபெற்றது. விழுப்புரம் மாவட்டத்தில் 100 சதவீதம் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் 24 மணி நேரமும் செயல்பட தமிழக அரசு உத்தரவிட்டதை தொடர்ந்து சுகாதாரத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த்துறை, பள்ளிக்கல்வித்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணிகள் உள்ளிட்ட துறைகளைச் சார்ந்த அனைத்து அலுவலர்களும் தங்களது துறையின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம செவிலியர்கள், ஊராட்சி செயலாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்டவர்களை ஒருங்கிணைத்து அனைத்து ஊராட்சிகளிலும் தடுப்பூசி முகாம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டதன் பேரில் நேற்று காலை வீடூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் தடுப்பூசி முகாமை மாவட்ட ஆட்சியர் மோகன் தொடங்கி வைத்தார். அப்போது பேசிய மாவட்ட ஆட்சியர் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள இரண்டு தவணைகளையும் தவறாமல் செலுத்தி கொள்ள வேண்டுமென பொதுமக்களை கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சி முடிந்து புறப்பட தயாரான மாவட்ட ஆட்சியரை இடைமறித்து தங்கள் பள்ளியில் உள்ள சமையலறை கட்டிடம் பாதுகாப்பின்றி விடிந்து விடும் நிலையில் உள்ளதை தாங்கள் பார்வையிட வேண்டும் என சமையல் பொறுப்பாளர் ஜெயா கூறியதை அடுத்து அங்கு சென்று ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் அதனை தனது செல்போனில் படம் எடுத்துக் கொண்டார். இதனை தொடர்ந்து அவர் அந்த பாழடைந்த சமையலறை கட்டிடம் எதிரே உள்ள நூலகத்தில் செயல்பட மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் மயிலம் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருக்கு உத்தரவிட்டார். மேலும் வீடூர் பகுதியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் செயல்பட்டு வந்த நியாய விலை கடை கட்டிட மேற்கூரை சில தினங்களுக்கு முன்பு பெயர்ந்து விழுந்து இரு பெண்கள் காயமடைந்தனர். அந்தப் பாழடைந்த நியாயவிலை கட்டிடத்தை உடனடியாக அகற்றி விட்டு இரண்டு மாதங்களுக்குள் புதிய கட்டிடம் அங்கு அமைக்கப்பட்டு நியாய விலை கடை செயல்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

ரூ.3 கோடி கேட்டு அரிசி ஆலை அதிபரின் மகன் கடத்தல் கிருஷ்ணகிரியில் 2 பேர் கைது

கிருஷ்ணகிரி,ஆக.25 2021: கிருஷ்ணகிரி பழைய பேருந்து நிலையம் அருகே கடத்தல் கும்பலைச் சேர்ந்த முக்கிய குற்றவாளிகள் 2 பேர் கைது

திருப்பூரில் ரூ 3 கோடி கேட்டு அரிசி ஆலை அதிபரின் மகன் கடத்தப்பட்ட வழக்கில் மதுரையில் 3 பேர் கைது

கடத்தல் கும்பலைச் சேர்ந்த முக்கிய குற்றவாளிகள் 2 பேர் கிருஷ்ணகிரியில் கைது . அவர்கள் 2 பேரும் கிருஷ்ணகிரி பழையபேட்டை, குருவிநாயனபள்ளி பகுதியை சேர்ந்தவர்கள் . அவர்களிடமிருந்து ஒரு டாடா சுமோ கார் மற்றும் ரூ 20 லட்சத்து 44 ஆயிரம் பறிமுதல்.

திருப்புல்லாணி வட்டாரத்தில் விதை நெல் மானியத்தில் விநியோகம்

ராமேசுவரம்,ஆக.25 2021: திருப்புல்லாணி வட்டாரத்தில் வேளாண்மைத்துறை சார்பில் விதை நெல் மானியத்துடன் விநியோகம் செய்ய உள்ளதாக வோளண்மைத்து அதிகாரி திங்கட்கிழமை தெரிவித்தார். ராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி வட்டாரத்தில் திருப்புல்லாணி மற்றும் திரு உத்திரகோசமங்கை வேளாண்மை விரிவாக்க மையங்களில் தரமான ஆடுதுறை-45, என்எல்ஆர்- 34449 , ஜோதி, கோ-51 இரக நெல் விதைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விதை கிராம திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் ஆகிய திட்டங்களில் மானிய விலையில் நெல் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சுமார் 36 டன் நெல் விதைகள் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இவற்றில் ஆடுதுறை-45, ஜோதி மற்றும் கோ-51 இரகங்கள் 110 முதல் 115 நாள் வயதுடைய இரகங்கள். என்எல்ஆர்-34449 இரகம்; 125 முதல் 130 நாள் வயதுடையவை. தரமான நெல் விதைகளை மானியத்தில் வாங்கி பயனடைய வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இதைப்போல் உச்சிப்புளி வேளாண்மை விரிவாக்க மையத்திலும் கோ-51, ஜோதி, என்எல்ஆர்-34449 நெல் விதைகள் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என வேளாண்மைத்துறை அதிகாரி திங்கட்கிழமை தெரிவித்தார்.

மதுரை: மதுரை மாவட்டம் வேளாண்மை துறை சார்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரும்பனூர் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி இயந்திர நடவுத் திடலினை மாவட்ட ஆட்சித் அனீஸ் சேகர் அவர்கள் பார்வையிட்டார்.

